**OS. 70/2022.**

**நாள். 24.06.2024.**

**வா.சா. 1 –** பாலு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்....

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

இந்த வழக்கில் கண்ட தொகையை பொருத்து வருமான வரிக் கணக்கு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வருமான வரி சட்டத்தின்படி நான் தண்டிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சத்யா வீட்டிற்கு சென்று வர இருந்த போது பிரதிவாதி இராஜேந்திரன் எனக்கு பழக்கமானார். இந்த பிரதிவாதி எனக்கு தூரத்து உறவினர் கூட ஆவார். சத்யா என்னிடம் பணம் வாங்கியிருந்தார் அது சம்பந்தமாக நான் அவர் வீட்டிற்கு போக வர இருந்தேன். சத்யா வேலை எதற்கும் போகவில்லை என்றும் அவர் வீட்டுக்குடித்தனம்தான் செய்கிறார் என்றும் சொன்னால் அவர் என்ன செய்கிறார் என்று எனக்குத் தெரியாது. சத்யா என்ன தொழில் செய்கிறார் என்று தெரியமலேயே அவருக்கு நான் கடன் கொடுத்தேனா என்ற கேட்டால் அவரும் அவருடைய கணவரும் வந்து கடன் கேட்டதால் நான் கடன் கொடுத்தேன். எனக்கு சத்யாவின் கணவர் தாமரைச்செல்வனை மட்டும்தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல, அவர்கள் இருவரையும் எனக்குத் தெரியும். சத்யாவின் கணவர் ரோடு போடும் ஒப்பந்ததாரராக வேலை செய்து வருகிறார். சத்யாவின் கணவர் என்னிடம் 2015 ல் ரூ.15,00,000/– என்னிடம் கடன் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. அவர் அவ்வாறு கடன் வாங்கினார் என்றும் மாதம் ரூ. 45,000/– வீதம் 2020 மார்ச் மாதம் வரை முறையாக செலுத்திவந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு செலுத்தி வந்தார் என்றும் அதன்பிறகு கொரோனா காலம் வந்ததால் தொழில் செய்ய முடியாததால் பணம் செலுத்த அவர் அவகாசம் கேட்டார் என்று சொன்னால் என்றால் சரியல்ல. பிரதிவாதி இதுவரை அசல் வட்டி சேர்ந்த வகையில் மொத்த தொகையில் இதுவரை ரூ.3,00,000/– வரை வட்டி மட்டுமே செலுத்தியுள்ளார் என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தொகையை அவர் எப்போது எங்கு வைத்து செலுத்தினார் என்று வழக்குரையிலும் என்னுடைய முதன்மை விசாரணை சாட்சியத்திலும் சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் அவர் மாதமாதம் என்

வீட்டிற்கு வந்து அந்த வட்டி தொகையை செலுத்தினார். அவர் வட்டி செலுத்தினார் என்பதற்கு எந்த ஆதாரமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் கைச்சீட்டின் நான் வரவு வைத்துக் கொடுத்துவிடுவேன் அதை அவர் எடுத்து சென்றுவிடுவார். அவர் வட்டி வரவு வைத்ததற்கு கைச்சீட்டை நான் நகல் எடுத்து வைத்துக்கொள்ளவில்லை அவர் வட்டி செலுத்தியதற்கு அவரிடம் நான் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை காரணம் அவர் வட்டி செலுத்தியதற்கு நான் ஆதாரம் எதுவும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. பிரதிவாதி மாதம் ரூ.34,000/– வீதம் செலுத்தி வந்தார். மொத்த வட்டி ரூ. 3,06,000/– வந்ததில் அவர் ரூ.6000/– செலுத்தவேண்டியதில்லை என்று சொன்னதால் அவர் வட்டித்தொகையாக ரூ.3,00,000/–மட்டும் கட்டினார். முதலில் வட்டி செலுத்திவந்த சத்யாவின் கணவர் அதன்பிறகு வட்டி செலுத்தாததால் நான் சத்யாவின் வீட்டிற்குச் சென்று சத்யாவிடமும் சத்யாவின் தகப்பனரான இந்த வழக்கின் பிரதிவாதியிடமும் தகராறு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. பணத்தை செலுத்தவில்லை என்றால் ஜெயிலில் வைத்துவிடுவேன் என்று மிரட்டி இராஜேந்திரன் மற்றும் சத்யாவிடம் இருந்து சொத்து பத்திரங்களை வாங்கி கொண்டு வெற்று பத்திரத்திலும் வெற்று காசோலைகளிலும் கையெழுத்து வாங்கி கொண்டு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பெயரளவிற்குத் தான் பத்திரங்களையும் கையெழுத்துகளையும் வாங்கி கொண்டேன், பணம் கொடுத்து விட்டால் நான் அனைத்து ஆவணங்களையும் கொடுத்துவிடுகிறேன் என்று நான் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. கீரல் எஸ்.இராஜேந்திரன் என்பதும் சாட்சிகள் என்று எழுதி அதற்கு கீழே இரு கையொப்பங்கள் மட்டும் ஒரு பேனாவாலும் மற்ற விவரங்கள் வேறொரு பேனாவாலும் வா.சா.ஆ.1 கடனுறுதி பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை எழுதியவர் ஒரு பேனாவினால் எழுதினார் சத்யாவும் அவரது கணவரும் ஒரு பேனாவினால் கையெழுத்து போட்டார்கள் அதே பேனாவினால் இராஜேந்திரன் பெயரை அவருடைய மருமகன் எழுதினார் அதற்கு கீழே இராஜேந்திரன் கைநாட்டு வைத்தார். சாட்சிகள் என்று எழுதியிருப்பதை என் பேரன் எழுதினார். அவர் எழுதினாரா இராஜேந்திரனின் மருமகன் எழுதினாரா என்று தற்போது ஞாபகமில்லை. பொதுவாக கடன் வாங்குபவர்கள் கையெழுத்து மட்டும்தான் போடுவார்கள் என்றும் சாட்சிகள் என்று

ஆவணத்தில் எழுதமாட்டார்கள் என்றும் சொன்னால் அந்த விவரங்கள் எனக்கு பழக்கமில்லை. வா.சா.ஆ. 1 பத்திரத்தில் இப்படிக்கு என்று எழுதப்பட்டுள்ளதற்கு கீழே ஒரு இன்ச் அளவிற்கு இடம் விட்டு அதற்கு கீழே கீரல் இராஜேந்திரன் என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். உன் மருமகனை உள்ளே வைத்துவிடுவேன் என்று மிரட்டி 02.08.2021 அன்று ஒரு பேனாவை பயன்படுத்தி கீரல் இராஜேந்திரன் என்று எழுதி சாட்சிகளிடம் அதே பேனாவினால் கையெழுத்து வாங்கப்பெற்றது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அந்த விவரங்களை பெற்றேன் என்றும் அதன்பிறகு வா.சா.ஆ. 1 ஆவணத்தில் மற்ற விவரங்களை எழுதி கொண்டேன் என்றும் சொன்னால் தவறு. சாட்சிகளின் கணவர் பெயர் , தகப்பனார் பெயர், முகவரி விவரங்கள் இந்த பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை என்று சொன்னால் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளது போல் மூன்று இலட்சம் வட்டியாக செலுத்தப்பட்டிருந்தால் அதை என்னால் இந்த ஆவணத்தில் வரவு வைத்திருக்க முடியும் என்றும், அவ்வாறு வட்டி எதுவும் செலுத்தப்படாததால்தான் இந்த ஆவணத்தில் வரவு எதுவும் வைக்கப்படவில்லை என்றும் சொன்னால் கைச்சீட்டில் வரவு வைத்துக்கொடுத்ததால் நான் இந்த ஆவணத்தில் வரவு வைக்கவில்லை. நான் சொன்ன தேதியில் பணத்தை கொடுத்து கடனுறுதி சீட்டு பெறப்படாததால்தான் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கொடுத்தாக சொன்ன தேதியை மாற்றி வேறு தேதியை போட்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல, அது டைப்பிங் தவறு. நான் சொ'ல்லியவாறு கடனாக தொகையெதுவும் கொடுக்காததால்தான் அவசரம் அவசரமாக கடனுறுதி சீட்டை நானாக உற்பத்தி செய்து கொண்டு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லியபடி கடன் கொடுக்காததால்தான் சொத்துக்கான வில்லங்கச்சான்றை நான் உடனே வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 02.08.2021 அன்று பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று மிரட்டி வாங்கிய கையெழுத்துகளை பயன்படுத்தி வழக்கு கடனுறுதி சீட்டை போர்ஜரியாக தயார் செய்துகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு 65 வயது ஆகிறது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அவர் சொன்னதை வைத்து வழக்குரையில் அவர் வயதை பதிவு செய்தேன். பிரதிவாதி தற்போது எந்த வேலையும் வருமானமும் இல்லாமல் வீட்டில் இருந்து வருகிறார் என்று

சொன்னால் அது எனக்குத் தெரியாது. பிரதிவாதி அவருடைய வீட்டில் தனியாக வாழ்ந்து வருவதால் இந்த வழக்கில் சொல்லியுள்ள தொகையை என்னிடம் கடனாக வாங்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்று சொன்னால் அவர் சொத்து பத்திரம் கொடுத்து அவர் பணம் கேட்டார் நான் அவருக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்றும் நான் பொய் வழக்குத்தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை